BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு அமைப்பு இப்போது ஜார்ஜ் ஹிட்ச்காக் பணமுடிப்பு மற்றும் புதிய தீயணைப்பு வீரர்களை பணி நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்களை வரவேற்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 1, 2022) – ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் அமைப்பு இப்போது ஜார்ஜ் ஹிட்ச்காக் நினைவு நன்கொடை நிதி பெறுவதற்கான விண்ணப்பங்களை வரவேற்கிறது. இந்த வருடாந்திர பணமுடிப்பு வழங்கும் திட்டமானது, தீயணைப்பு சேவைகளில் தங்கள் தொழிற்பாதையைத் தொடங்க விரும்பும் தனி நபர்களுக்கு என ஏற்படுத்தப்பட்டது.

விண்ணப்பிப்பதற்கு, நாட்டம் உள்ள விண்ணப்பதாரர்கள் கொண்டிருக்க வேண்டிய தகுதிகள்:

- கனடா குடியுரிமை பெற்று கனடாவில் பணியாற்றும் தகுதி கொண்ட, ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசியாக வேண்டும்
- பள்ளிக்கல்வியின் இரண்டாம் நிலைக்கு அடுத்தபடியாக, தீயணைப்பு சம்பந்தப்பட்ட பாடத்திட்டத்தில் பட்டயப் படிப்பு படித்திருக்க வேண்டும்
- பூர்த்தி செய்த விண்ணப்பங்களை ஏப்ரல் 15 க்குள் சமர்ப்பிக்கவும்

விண்ணப்பங்கள் bramptonfire.com இல் பெற்று firelife@brampton.ca எனும் மின்னஞ்சல் வழியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்னப்பங்கள் ஏப்ரல் 15 வரையிலோ, அல்லது அதிகபட்சமாக 30 விண்ணப்பங்கள் வருதல், இதில் எது முதலாவதோ, அதுவரை பெறப்படும்.

தேர்வு செய்யப்பட்டவர்கள் என்ற பட்டியலில் இடம் பெற்ற விண்ணப்பதாரர்கள், நேர்காணலில் பங்கேற்க அழைக்கப்படுவார்கள்; $1,000 உதவித்தொகை பெற, இதில் ஒரு விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்படுவார்; இந்த உதவித்தொகை அவர்களின் படிப்பு சேர்க்கைக்கு நேரடியாக செலுத்தப்படும். வெற்றிகரமான விண்ணப்பதாரர், ஒன்ட்டாரியோ உயர்நிலைப் பள்ளிக்கு அடுத்த நிலைக் கல்வி கற்க அனுமதிக்கப்பட்டதற்கான ஆதாரத்தை வழங்க வேண்டும்.

ஜார்ஜ் ஹிட்ச்காக் மெமோரியல் நன்கொடை நிதியானது, 2014 ஆம் ஆண்டு ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள் குழுவில் 33 ஆண்டுகள் பணியாற்றி மறைந்த மண்டலத் தலைவர் ஜார்ஜ்

ஹிட்ச்காக்கை கௌரவிப்பதற்காக நிறுவப்பட்டது. தீ/உயிர் பாதுகாப்புக்கான கல்விப் பிரிவை நிறுவுவதில் ஹிட்ச்காக் முக்கிய பங்கு வகித்தார்; இதுவே ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்களுக்கு தீயிலிருந்து  பாதுகாப்பு பெறுவதற்கான கல்வியை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

மேலும் தகவல்கள் பெறவதற்கும் விண்ணப்பிப்பதற்கும் வருகை தரவும்: bramptonfire.com

**ஆள் சேர்ப்பு**

ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் அமைப்பு இப்போது புதிய தீயணைப்பு வீரர்களுக்கான ஆட்சேர்ப்பு செய்கிறது. விண்ணப்பங்கள் மார்ச் 21 வரை ஏற்கப்படும். தீயணைப்பு சேவைகள் பற்றி, தெரிந்துகொண்டு  அதில் தங்கள் தொழிற்பாதையைப் அமைத்துக்கொள்ள விரும்பும் விண்ணப்பதாரர்கள் மார்ச் 9 ஆம் தேதி மாலை 6 மணிக்கு நடைபெறவிருக்கும் தொழிற்பாதை தகவல் பற்றிய  மெய்நிகர்  அமர்வில் பங்கேற்க அழைக்கப்படுகிறார்கள். கலந்துகொள்ள, பதிவு செய்ய வேண்டிய தளம்: bramptonfire.com

ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் அமைப்புடனான ஒரு தொழிற்பாதை பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: bramptonfire.com

**அறிஞர் கூற்றுக்கள்**

“எங்கள் ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் குழுவானது,  சமூகப் பாதுகாப்பு மற்றும் தீயிலிருந்தான பாதுகாப்புக்கு அர்ப்பணிப்புள்ள நபர்களைக் கொண்டுள்ளது. இந்தக் குழுவில் ஜார்ஜ் ஹிட்ச்காக் ஒரு உத்வேகமான உறுப்பினராக இருந்தார்; தீயணைப்பு சேவையில் ஒரு தொழிற்பாதையைத் தொடர்வதற்கான தகுதி வாய்ந்த ப்ராம்ப்ட்டன்வாசிகள் இந்த வாய்ப்பு பெறுவதற்காக விண்ணப்பிக்க நான் ஊக்குவிக்கிறேன்.”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் குழு ஒவ்வொரு நாளும் மென்மேலே சென்று நமது சமூகத்தைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும், ப்ராம்ப்ட்டனை ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான நகரமாக மாற்றவும் பங்களிப்பு செய்கிறது. தாங்கள் சேவை செய்யும் சமூகத்தை பிரதிபலிக்கும் வகையில், பன்முகத்தன்மை கொண்ட, அனைவரையும் உள்ளடக்கிய குழுவை உருவாக்குவதற்கும் அவர்கள் உறுதிபூண்டுள்ளனர். நமது புதிய வருங்கால தீயணைப்பு வீரருக்கு

ஆதரவளிப்பதற்கான வாய்ப்பை வழங்க இந்த வருடாந்திர பணமுடிப்பு வழங்கும் திட்டம் திரும்பவும் வருவதைப் பார்ப்பது மகிழ்ச்சி அளிக்கிறது."

- *ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; தலைவர், சமூதாய சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"மண்டலத் தலைவர் ஜார்ஜ் ஹிட்ச்காக் அவர்கள், தீயணைப்பு சேவைகள் மற்றும் சமூக பாதுகாப்பு ஆகியவற்றின் பேரில் பேரார்வமுள்ள சாம்பியனாக இருந்தார். ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள் குழுவிற்கு அவர் ஆற்றிய பங்களிப்புகளுக்காகவும், ஆர்வமுள்ள தீயணைப்பு வீரருக்கு உதவுவதற்காக இந்த உதவித்தொகையை வழங்குவதுவும் அவருக்கு நாம் செலுத்தும் ஒரு மரியாதையாகும்."

- *பில் போயெஸ், ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள் அமைப்பு*

"ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள் அமைப்பானது, சமூகத்தினருக்கு கல்வி புகட்டவும் அவர்களைப் பாதுகாக்கவும் அயராது உழைக்கிறது. தீயணைப்பு சேவைகளில் ஒரு தொழிற்பாதையைத் துவங்க ஆர்வமுள்ள குடியிருப்புவாசிகள் இந்த பரவசமான வாய்ப்புக்காக விண்ணப்பித்து, நம்பமுடியாத குழுவின் ஒரு அங்கமாக இருந்தபடி, ப்ராம்ப்ட்டனின் சமூகத்திற்குத் தங்களால் இயன்றதைத் திரும்பக் கொடுப்பதற்குமான இந்த அற்புதமான வாய்ப்பைப் பெறுமாறு நான் ஊக்குவிக்கிறேன்."

- *பால் மோரிஸன், இடைக்கால தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பல கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca